DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.180/2022 | Deposition of Witness for : PW6 |
| Name : சின்னத்துரை | Father/Husband Name : ஆத்தி |
| Age : 55 | Village : நாசரேத் |
| Taluk : ஏரல் | Calling : பந்தல் அமைக்கும் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 25 March 2026.
Accused absent. Petition U/s.317 Cr.P.C/355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது நாசரேத்தில் குடியிருந்து பந்தல் அமைக்கும் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 07.11.2021 அன்று இரவு சுமார் 10.30 மணியளவில் வழக்கின் சம்பவ இடத்தை போலீசார் தெருவிளக்கு வெளிச்சத்தில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து கொண்டிருந்தார்கள். நான் அதில் கையொப்பம் செய்தேன். அந்த பார்வை மகசரில் என்னுடன் யார் கையொப்பம் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

2. நான் காவல்நிலையத்தில் வைத்து தான் அ.சா.ஆ.2 ல் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல, தெருவில் வைத்து தான் கையொப்பம் செய்தேன். நான் எழுதப்படாத வெள்ளைப் தாளில் தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. நான் சுமார் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் ஒரு கையொப்பம் தான் செய்தேன். போலீசார் என்னிடம் கையெழுத்து போட கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். நான் அ.சா.ஆ.2 ஆவணத்தை படித்துப் பார்க்கவில்லை என்றாலும் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது என்றாலும் சரிதான். என்னுடன் யார் யார் அ.சா.ஆ.2 ல் கையொப்பம் செய்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** : இல்லை

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.03.25 15:38:03 +0530

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.03.25 15:38:18 +0530

Judicial Magistrate, Sathankulam.